ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2204/3 - 2020 නොවැම්බර් මස 30 වැනි සඳුදා - 2020.11.30

*2204/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 10/3/1/3/76.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/9/2018/WS/48.

பாரிய மாத்தளை நீர் விநியோகத்திட்டத்தின் இரத்தோட்டை நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணப்பணிக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தளை பல்லேசிய பத்துவ சிறுபிரிவில் மாஉச்சாகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. மா 1824 இல் காட்டப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: அச்வெத்தமே வத்த; விபரம்: மைதானம்; உரிமை கோருபவர்: திரு. டீ. ஜீ. பீ. சமரநாயக்க மற்றும் ஏனையோர்; விஸ்தீரணம்: 0.0681 ஹெக்டயார்.

**துண்டு இல. 2**

காணியின் பெயர்: அச்வெத்தமே வத்த; விபரம்: மைதானம்; உரிமை கோருபவர்: திரு. டீ. ஜீ. பீ. சமரநாயக்க மற்றும் ஏனையோர்; விஸ்தீரணம்: 0.0531 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். என். தினிபிரிய,
பிரதேச செயலாளர்,
இரத்தோட்டை.

பிரதேச செயலகம்,
இரத்தோட்டை.
2020, நவெம்பர் 12.

12 - 211

1A - G 33290 - 15 (2020/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.